Registered as a Newspaper

பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 248

செவ்வாய்க்கிழமை 01 ஓகஸ்ட் 2023

ஆடி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


## பெற்றோல் விலை மீண்டும் அதிகரிப்பு



கொழும்பு, ஓக. 1

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கைப் பெற

»11

# தமிழ்த் தலைவர்களுடன் ஒன்றித்துப் பயணிக்க விருப்பம்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1**

**தமிழ்த் தலைவர்களுடன் நாம் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். அவர்களும் மக்களின் நலன் கருதி அதனைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்கள் என்று எண்ணுகின்றேன்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

»11



## தொடர் காய்ச்சலால் குடும்பப் பெண் சாவு!



யாழ்ப்பாணம், ஓக. 1

6 நாள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுகந்தன் ஜான்சி (வயது- 46) என்ற

»11

வவுனியா இரட்டைக்கொலை:

## ஒரு வாரத்தின் பின்னர் 5 சந்தேகநபர்கள் கைது

*யாழ்ப்பாணத்தவர்களும் உள்ளடக்கம்*

வவுனியா, ஓக. 1

தோணிக்கல்லில் இடம்பெற்ற வாள் வெட்டு மற்றும் வீடெரிப்பு தாக்குதலால் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒரு

»11

## சிறுமி வன்புணர்வு சந்தேகநபர் கைது

வவுனியா, ஓக. 1

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய

»11

## இந்தியாவுக்கு கடத்தப்பட்ட 9 கிலோ தங்கம் பறிமுதல்

சந்தேகத்தில் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடல்வழியாக கடத்தப்பட்ட 9 கிலோ தங்கம் இந்திய மத்

»11

## தாலிக்கொடி களவு: இந்தியப்பிரஜை கைது

யாழ்ப்பாணம், ஓக. 1

நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் நேற்றைய தேர்த்திருவிழாவின்போது பெண் ஒருவரின் தாலிக்கொடியை களவாடிய சந்தேகத்தில் 4 பெண்

»11



## சிங்களவருக்கு காணி தாரைவார்ப்பு பல்கலை மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அக்கரைவெளியில் தமிழ் மக்களின் காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகார

»11

போலி ஆவணங்களால்

## கட்டுநாயக்கவில் சிக்கிய யாழ்ப்பாண இளைஞர்கள்

கொழும்பு, ஓக. 1

போலிக் கடவுச்சீட்டு மற்றும் விமானப் பயணச்சீட்டு ஆகியவற்றைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்வதற்கு முயற்சித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் உட்பட 5 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் ஒருவர் புத்தளம் பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடையவராவார்.

»11

## வவுனியா சிறையில் சின்னம்மை நோய்

இரு வாரங்கள் முடக்கம்

வவுனியா, ஓக. 1

வவுனியா சிறைச்சாலையில் கைதிகளுக்கு சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளமையால் சிறைச்சாலை 14 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், கைதிகளை உறவினர்கள் பார்வையிடுவதும் இடைநிறுத்தப்பட்

»11

ரணிலின் இந்தியப் பயணம்:

## இந்திய முதலீட்டாளர்கள் வடக்குக்கு படையெடுப்பு

கொழும்பு, ஓக. 1

இந்திய முதலீட்டாளர் குழுவொன்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மாகாண அரசாங்க அதிகாரிகளை நேற்று திங்கட்கிழமை சந்தித்து மாகா

»11





## வடக்கு ரயில்சேவை மட்டுப்பாடு; காரணம் அரசியல் இல்லையாம்!!

*போக்குவரத்து அமைச்சர் பந்துல விளக்கம்*

யாழ்ப்பாணம், ஓக. 1

ரயில் பாதை புனரமைப்புக்கு முன்னர் வடக்குக்கு இடம்பெற்ற ரயில் சேவைகள் சில நிறுத்தப்பட்டுள்ளமைக்கு அரசியல் ரீதியான காரணம்

»11


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி முறையிலான தீர்வு: வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!




வவுனியா, ஓக. 1

**கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல்தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் அரசியல் தீர்வு தொடர்பில் அண்மைக்காலமாக சர்வகட்சிப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே, கௌரவமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வே தமிழர்களுக்குத் தேவை' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (ம-110)

# நிழல்தரும் மரங்கள் விஷமிகளால் அழிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். நகரில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் மத்தியூஸ் வீதியில் நடப்பட்டிருந்த நிழல்தரும் மரங்கள் சில விஷமிகளால் அழிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் இரவு வேளைகளில் சிலர் மதுப்பாவனையில் ஈடுபடுகின்றார்கள் என்றும், அவர்களே இந்த மரங்களை அழித்துள்ளனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-ரி2)



# புதிய பாதை இல்லாமல் தீர்வுக்கு வாய்ப்பில்லை!

## சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 1

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக, இனியும்பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்காமல் நாங்கள் புதிய பாதையை வகுக்க வேண்டும். வல்லரசுகளை எங்களை நோக்கி வரச்செய்யக்கூடியதாக அந்தப் பாதை அமையும் போதுதான் எங்களின் பிரச்சினைகள் காதுகொடுத்துக் கேட்கப்படும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாந்தோட்டையில் சீனாவின் கடற்படைத்தளத்துக்குக் காணியைக் கொடுத்துவிட்டு, தலைநகர் கொழும்பில் சீனாவுக்கு செயற்கைத் துறைமுக நகரத்தை உருவாக்க இடமளித்துவிட்டு, சீனாவின் பரம எதிரியான பாரத தேசத்துக்குச் சென்று அந்த நாட்டின் பிரதமரைச் சந்திக்கிறார் சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இங்கேதான் சிங்களவர்களின் கெட்டித்தனத்தைப் பார்க்கவேண்டும்.

அவர்களால் சீனாவையும் சமாளித்து இந்தியாவையும்சமாளிக்க முடிகின்றது. ஆனால் நாங்கள் இந்தியா என்று ஒற்றைப்புள்ளியில்தான் இருக்கின்றோம். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்போதும் இந்தியாவையே நம்பியிருந்திருக்கின்றார்கள். அதற்குப் பழக்கப்படுத்தியும் விட்டார்கள். இதனால்தான் நாங்கள் வேறு எதையும் சிந்திக்கத் தலைப்படாதவர்கள் ஆகிவிட்டோம்.

சீனாவுக்கு இடமளித்த பின்னரும், இந்தியாவுக்கு சிறிலங்கா ஜனாதிபதியை அழைக்கும் நிலைமை இருக்கின்றது.

ஆனால் இந்தியாவையே இன்றுவரை நம்பியிருக்கும் தமிழர்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருக்கின்றது. இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தம் இன்று 13 மைனஸில் வந்து நிற்கின்றது.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு அதிகாரப் பரவலாக்கமும் இப்படித்தான் இருக்கும். பகிரப்பட்ட எந்தவொரு அதிகாரமும் பறிக்கப்படாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. இவ்வாறானதொரு நிலையில் நாம் 13இனைப் பேசி இன்னமும் எவ்வளவு காலத்தை வீணடிக்கப்போகின்றோம்? - என்றார். (ம-125)

# திறைசேரி உண்டியல் இன்று ஏலம்

கொழும்பு, ஓக. 1

ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், இன்று ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 55 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ம)

# மட்டக்களப்பில் கறுப்பு ஜூலை!

மட்டக்களப்பு, ஓக. 1

கறுப்பு ஜூலைக் கலவரங்கள் இடம்பெற்று 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

துறைநீலாவணை தமிழரசுக்கட்சியின் வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது கறுப்பு ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-213)



# ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 1

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலைஞருக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசெயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-ரி2)

# அலைபேசியால் மாணவர்களின் செயன்முறைக் கல்வி பாதிப்பு!

## மருத்துவ நிபுணர் ரூமி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1

பாடசாலைக் கட்டமைப்பில் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பிற தொழில்நுட்பக் கருவிகளின் அதிகப்படியான பயன்பாடு காரணமாக, மாணவர்கள் செயன்முறைக் கல்வியில் இருந்து விலகும் அபாயம் காணப்படுகின்றது என்று மனநல மருத்துவ நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


அடிமையாதல் மற்றும் மாணவர்களின் மனநலம் பாதிக்கப்படுவதை கருத்திற்கொண்டே பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிப்பாவனையைத்தடைசெய்ய வேண்டும் என யுனெஸ்கோ அமைப்பு பரிந்துரைத்துள்ளது.

கொவிட் தொற்றுநோயின் பின்னர்பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசி பயன்பாடு மற்றும் பாடசாலை முடிந்ததும் அவற்றின் பயன்பாடு மற்றும் பல்வேறு வகையான டெப்கள் மற்றும் பிற டிஜிட்டல் சாதனங்களின் பயன்பாடு மாணவர்களிடையே அதிகரித்துள்ளது. மேலும் புத்தகம் படிக்கும் நேரமும் குறைவு. ஆசிரியர்களுடன் இருக்கும் நேரமும் குறைவு. ஒரு திரையில் தங்கள் வாழ்க்கையின் அதிக நேரத்தை செலவிடுவதால், அதற்கு அடிமையாகிவிடும் திறன் உள்ளது. இது குழந்தைகளின் மன ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனித்துவம் வடக்கில் இழக்கப்படும்!

## யாழ். பல்கலையின் வேந்தர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஓக. 1**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பீடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளுக்குச் சென்றுள்ள நிலையில் ஐந்து வருடங்கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் எனக் கூறும் நிலை மாறி விடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும் வேந்தருமான பத்மநாதன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தைத் தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கத்துக்குள் சென்றுவிட்டது. இதைப்போல் வடக்கு மாகாணமும் விரைவில் தன் தனித்துவ அடையாளத்தை இழக்கும். அதற்குரிய நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களுடைய மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியன பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

அதனைப் பாதுகாப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங்களை மீளப்பெற்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் எமது இருப்பை ஓரளவு நிலைநாட்ட முடியும்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலைவர்கள் உரிய நேரத்தில் கேட்கவேண்டியவற்றை கேட்காமையின் தவறாலேயே இலங்கையில் இனப் பிரச்சினை உருவெடுத்தது.

எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொண்டால் நிலங்களையும், கடல் வளங்களையும் பயன்படுத்தி பொருளாதாரத்தில் பலமடையமுடிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கிக்கொள்ள முடியும். எனவே உரிய முறையில் மாகாணசபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்த எல்லாக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்.

அதேநேரம், மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும் - என்றார். (ம-27)



## பூநகரி காட்டுக்குள் நேற்றுமுன்தினம் தீ

பூநகரி, ஓக. 1

பூநகரி முக்கொம்பன் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வனவளத் திணைக்களத்தினரின் முயற்சியை அடுத்து தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ம-ரி2,9)

## வடக்கிலிருந்து நால்வர் தமிழ்நாட்டில் தஞ்சம்!

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியையடுத்து, மேலும் நான்கு தமிழர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் நால்வரே இலங்கையிலிருந்து படகில் புறப்பட்டு நேற்றுத் திங்கட்கிழமை காலை தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் மரைன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர். விசாரணையின் பின்னர் 'அகதிகள் மறுவாழ்வு முகாமில்' அவர்களைத் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ய-100)



## 500 கிலோ ஆமைகளை கடத்திய இருவர் கைது!

மானிப்பாய், ஓக. 1

சுமார் 500 கிலோ எடையுடைய நான்கு கடலாமைகளைக் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டுபேர்நேற்றுக்கைதுசெய்யப்பட்டனர். கீரிமலையிலிருந்து குருநகர் நோக்கி இறைச்சிக்காக இந்தக் கடலாமைகள் கொண்டுசெல்லப்பட்டபோதே, மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய அவற்றைக் கடத்திய 47 மற்றும் 32 வயதுடைய இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-ரி3,125)




**இப்ப 13ஆவது திருத்தத்தைக் கொண்டு வரவேணும் எண்டு ஒற்றைக்காலில நிக்கிற விக்கியர், முதலமைச்சரா இருக்கேக்க '13 இல ஒரு மண்ணுமில்லை' எண்டு சொல்லிக் கொண்டு திரிஞ்சவர். அதே விக்கியர்தான் இப்ப '13ஐ எப்பிடியாவது நிறைவேற்றுங்கோ. அதோட 13 இல சொல்லுப்பட்ட இடைக்கால நிர்வாகசபையை அமையுங்கோ' எண்டு எலக்சன் வைக்காமல் தப்ப நினைக்கிற ரணிலுக்கு வேலிபிரிச்சுக் குடுக்கிற வேலையைப் பார்க்கிறார். இப்பிடி அதுவேறவாய் இதுநாறவாய் எண்ட கணக்கில 13க்காக இப்ப விக்கியர் ஏன் ஆலவட்டம் எடுக்கிறார் எண்டு கனபேருக்கு குழப்பம். சோழியன் குடுமி மட்டுமில்ல விக்கியரின்ர தாடியும் சும்மா ஆடாது கண்டியளோ.**

**13ஆவது திருத்தத்தில இடைக்கால நிர்வாகசபை பற்றி ஒரு ஏற்பாடு இருக்கு. அதில தேர்தலில தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின்ர ஆட்சி நடக்காத காலத்தில மாகாண சபையை நிர்வகிக்கிறதுக்கு, ஒரு இடைக்கால சபையை அமைக்கிறது பற்றிச் சொல்லுப்பட்டிருக்கு. அந்த இடைக்கால சபையில முக்கியமான ஆளா மாகாணத்துக்கெண்டு ஒரு சட்டமா அதிபரைத் தெரிவு செய்யலாம் இல்லாட்டி ஆளுநர், பொருத்தமான ஒருத்தரை சட்டச் செயலர் எண்டு நியமிக்கலாம். இந்த மாகாண சட்டமா அதிபர் / சட்டச்செயலர் தான் கிட்டத்தட்ட ஒரு முதலமைச்சர் மாதிரி இருப்பார். நியதிச் சட்டங்களையெல்லாம் இந்த மாகாண சட்டமா அதிபர்/ சட்டச் செயலர்தான் இயற்றுவார். எதிர்க்கட்சியின்ர தொல்லையள் கூட இல்லை. எலக்சன் நடக்கும்வரைக்கும் மாகாணத்தையே ஆட்டிப்படைக்கலாம். இப்பிடி ஒரு பின்வீட்டு அதிகாரம் லட்டு மாதிரி வருகுதெண்டால், அதை எப்பிடி விக்கியர் வேண்டாமெண்டுவார்?**

**ரணில் தரப்பு விக்கியரோட ஒரு டீல் போட்டிருக்காம். மாகாணசபைத் தேர்தலை நடத்தவிடாமல், தமிழ்க் கட்சியளை பேய்க்காட்டினால் அதுக்குப் பரிசா இடைக்கால நிர்வாகசபையில மாகாண சட்டமா அதிபரா விக்கியரைப் போடலாம் எண்டதுதான் அந்த 'டீலாம்'. அடிக்கடி இரவிரவா ரணிலும் விக்கியரும் போனில ஒரே அன்புமழை பொழிஞ்சு கொண்டிருக்கினம். அண்டைக்கு சர்வகட்சிக் கூட்டம் நடந்த இரவும் அடுத்த கட்டமா என்ன செய்து தமிழ்க் கட்சியளை பேய்க்காட்டலாம் எண்டு ரண்டுபேரும் மணித்தியாலக் கணக்கா பிளான் போட்டிருக்கினம். பதவியாசை எப்பிடியெல்லாம் ஆட்டிப் படைக்குது எண்டதுக்கு விக்கியரை விட்டால் இப்ப வேற நல்ல உதாரணம் இல்லை. தமிழரசுக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வெளிக்கிட்டதுக்கே, விக்கியருக்காக சிலிர்த்துப் போய் சனமெல்லாம் சில்லறையைச் சிதற விடுறளவுக்கு மதிப்போட இருந்த மனுசன் இப்பிடியாகிட்டாரே?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை, நான்காவது தமிழியல் ஆய்வு மாநாட்டை முன்னிட்டு, அனைத்துப் பீடங்களின் மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையை நடத்தியது. மருத்துவ பீடம், பொறியியல் பீடம், முகாமைத்துவபீடம், விஞ்ஞானபீடம், கலைப்பீடம் உள்ளிட்ட அனைத்துப்பீடங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இதில் பங்கேற்றனர். இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் -

**முதலாம் இடம்**



சிவானந்தம் பரணி



சிவபாலசுந்தரம் சதீஸ்லோ பிரசாத்

**இரண்டாம் இடம்**



தவராசா கஜனி



ரவீந்திரன் ரொஷானி

**மூன்றாம் இடம்**



நகுலேஷ்வரன் நிதர்ஷனா



வசந்தன் குயிலினி

ஏற்கனவே தமிழியல் ஆய்வு மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. அதன் இன்னொரு கட்டமாகவே பல்கலைக்கழக மாணவரிடையேயான தமிழறிவுப் போட்டியும் நடத்தப்பட்டிருந்தது. இத்தகைய போட்டிகள் மூலம் தமிழ்மொழி மீதான தேடலையும், பற்றையும் இளையோரிடத்தே ஏற்படுத்தமுனையும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையினரினதும், தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனினதும் பணிகளைப் பலரும் பாராட்டியுள்ளனர். (அ-ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 1

'மலையகம் 200 தாயகத்தின் பக்கங்கள்' என்ற தலைப்பில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல், தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் தொடக்க உரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான க.தணிகாசலம் ஆற்றவுள்ளார். கருத்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான ஆர்.பேபிசாலினி, கே.புவனேஸ்வரன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (ய)

## கும்பாபிஷேகம்

அளவெட்டி, ஓக. 1

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11.53 மணி தொடக்கம் 12.10 மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. (ம-ரி3-36)

## டெங்கு ஏதுநிலை இருவருக்குத் தண்டம்

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில், டெங்குத் தொற்றுக்கு ஏதுவான நிலையில் குடிருப்பை வைத்திருந்த இருவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-ரி2-36)

## வடமாகாண கூடைப்பந்தாட்டம்; சென்.பற்றிக்ஸ் சம்பியனானது!

யாழ்ப்பாணம், ஓக. 1

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட, கூடைப்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 34:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது. (ம)




## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு தாராளமாக இருக்கும். காலதாமதமாக முடியக் கூடிய காரியங்கள் கூட எளிதில் முடியும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு உத்தியோக ரீதியாக வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**இடபம்:** குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து காணப்படும். வாகனங்களால் வீண் செலவுகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் வேலைப்பளு குறையும்.

**மிதுனம்:** எந்தச்செயலிலும் மனமகிழ்ச்சியுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். தெய்வ வழிபாடு மன நிம்மதியைத்தரும். தேவைகள் யாவும் பூர்த்தியாகும்.

**கடகம்:** எதிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். வீட்டில் ஒற்றுமை கூடும். குடும்பத்தில் சிக்கனமுடன் செயல்படுவதால் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். தேவைகள் யாவும் பூர்த்தியாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். புதிய பொருள்கள் வாங்குவதில் கவனம் தேவை. உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சுபகாரிய முயற்சிகளில் அனுகூலப் பலன்கள் உண்டாகும்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மனக்குழப்பத்துடனும், கவலையுடனும் காணப்படுவீர்கள். அலுவலகத்தில் மேலதிகாரிகளுடன் நிதானமாக நடந்து கொள்வதன் மூலம் வீண் பிரச்சினைகளை தவிர்க்கலாம். எதிலும் கவனம் தேவை.

**துலாம்:** பணிகளை திறம்படச்செய்து முடிப்பீர்கள். பெற்றோருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும். திருமணம் சம்பந்தமான முயற்சிகள் நற்பலனை தரும். கடன் பிரச்சினை குறையும்.

**விருச்சிகம்:** எந்தக் காரியத்தையும் உற்சாகத்தோடு செய்து முடிப்பீர்கள். சுபகாரியங்கள் கைகூடும். சிலருக்கு வேலை விஷயமாக வெளியூர் செல்லும் வாய்ப்புகள் அமையும். பொன் பொருள் சேரும்.

**தனுசு:** உறவினர்களால் மனச்சங்கடங்கள் ஏற்படலாம். உடல்ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆடம்பர பொருள்களால் சேமிப்பு குறையும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளை அனுசரித்து சென்றால் முன்னேற்றம் காணலாம்.

**மகரம்:** குடும்பத்தில் உள்ளவர்களுடன் சிறுசிறு மனஸ்தாபங்கள் உண்டாகும். பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் மந்தநிலை காணப்படும். உத்தியோகத்தில் எதிர்பாராத பிரச்சினைகள் டென்ஷனை ஏற்படுத்தும்.

**கும்பம்:** வியாபாரத்தில் பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புகள் உருவாகும். உடன் பிறந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். பூர்வீக சொத்துக்களால் அனுகூலப்பலன் கிட்டும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்:** எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடைய எதிலும் பொறுமையுடன் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க உணவு விஷயத்தில் கவனம் தேவை. வியாபார ரீதியான கொடுக்கல் – வாங்கல் சிறப்பாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கனடாவுக்கு கல்லெறியலாமா?

கனேடியப் பழங்குடியினர் அந்த நாட்டில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்ற உண்மையை அப்பட்டமாக ஏற்று அதற்கு வருத்தமும் தெரிவித்திருக்கின்றார் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ். கனேடியத் தமிழர் பேரவையால் கொழும்பில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வொன்றிலேயே தனது கருத்தையும் அதன் மூலமாக கனேடிய அரசாங்கத்தின் 'சர்வதேசநிலைப்பாடு' மற்றும் 'சர்வதேச அணுகல்களையும்' பட்டவர்த்தனமாக்கியுள்ளார் தூதுவர் வோல்ஷ்.

இலங்கையில் இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னதாகவும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றன. இலங்கை அரசாங்கம் அத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டது என்றுகனேடிய நாடாளுமன்றம் கடந்த ஆண்டு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதையடுத்து, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகப் போர்க்குற்றம் தொடர்பான தீர்மானமொன்றை நிறைவேற்றிய முதலாவது நாடாகத் தன்னை நிலைநிறுத்தியது கனடா. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையில், மனித உரிமைகள் விவகாரத்தில் தணல் நிலையாக இருந்த கனடாவுக்கு எதிரான சிங்களப் பேரினவாத மனோநிலை, தீர்மானத்தின் பின்னராக கோரப்பற்களோடு வசைபாடலில் இறங்கியது. எவ்வளவுக்கெவ்வளவு கனடாவை எதிர்க்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தமக்கு நல்லது என்ற நிலைப்பாட்டை வரித்துக்கொண்ட சிங்களத் தலைவர்கள் எத்தனையோ விமர்சனங்களை கனடாவை நோக்கி முன்வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் கடைந்தெடுத்த இனவாதியுமான சரத் வீரசேகர ஒருபடி மேற்சென்று, இலங்கைக்கு எதிராகக் கனடாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைப்போன்று, கனடாவுக்கு எதிராக இலங்கையின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். கனடாவில் பழங்குடியினர் இனப்படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்ற உண்மையை தீர்மானமாக்கி அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். ஆனால், நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால், வீரசேகர இவ்வாறு கொக்கரிக்க முன்னரே, கனடாவில் பழங்குடியின மக்கள் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டமையை ஏற்று அதற்கு மன்னிப்பும் கோரியுள்ளார் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ. ஜஸ்ரின் ட்ரூடோவின் இந்த அறிவிப்பும் மன்னிப்பும் வெறுமனே உள்நாட்டுப் பிரச்சினையல்ல. பழங்குடியின மக்கள் தொடர்பான இந்த அறிவிப்பை கனேடிய அரசாங்கம் தன் சர்வதேசக் கொள்கையாக வரித்துக்கொண்டுள்ளது என்பதுதான் தற்போது தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றுக்களில் இருந்து மெய்ப்பிதமாகின்றது.

இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்று கனடா தெரிவித்தால், கனடாவிலும் இனப்படுகொலைகள் நிகழ்ந்தன என்று இலங்கை அறிவிக்க வேண்டும் என்ற மனோநிலையில் இதை அணுகிய சிங்களப் பேரினவாதிகள், தற்போது தூதுவர் வோல்ஷின் கருத்துக்கு என்ன பதில் வைத்திருக்கின்றனர்? கனடா தன் நாட்டில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்பதை ஏற்றதைப்போன்று இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற படுகொலைகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாரா? கனடா தீர்மானத்தை நிறைவேற்றுகின்றது, பிரான்ஸ் வலியுறுத்துகின்றது என்பதற்காக இலங்கை, மியான்மர் போன்ற நாடுகள் ஏட்டிக்குப்போட்டியாக நிற்கக்கூடாது.. தம் தவறை ஏற்பதில் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை. இனியும் இருக்கப்போவதில்லை.

'மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தல்' என்பதுதான் இனவழிப்புப்போன்ற இமாலய போர்க்குற்றங்களுக்கு நீதியைத் தேடுவதற்கான முதலாவது படிமுறை. இதை பழங்குடியினருக்கு எதிரான படுகொலைகளில் கனடாவும், துட்சிகளுக்கு எதிரான படுகொலைகளில் பிரான்ஸூம், கறுப்பினத்தவர்களுக்கு எதிரான படுகொலைகளில் தென்னாபிரிக்காவும் உறுதிப்படுத்தியுள்ளன. இதனால்தான், அடுத்தகட்டத்துக்குப் பயணப்பட அந்த நாடுகளால் முடிந்தது. ஆனால், தமிழர் தாயகத்தை பதற்றம்மிக்க பூமியாக வைத்திருக்கும் இலங்கைக்கும், 'மீண்டும் நிகழாது பார்த்துக்கொள்ளல்' என்ற நீதிப் பொறிமுறைக்கும் குறைந்தபட்சத் தொடர்புகூட இல்லை. இந்தக் கையறுநிலைதான் இலங்கையின் சாபக்கேடு. இவ்வாறான இழிநிலையில் இருந்துகொண்டு கனடாவுக்கு கல்லெறியலாமா? திருப்பி எறிந்தால்....(?)

நாளொரு நல்வார்த்தை

அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்து விடுங்கள். - கில்ப்பின்




# ரணில் களமிறங்கினால் ஐ.ம.ச. சின்னாபின்னம்!

## ஹரின் மீண்டும் சீண்டல்



**கொழும்பு, ஓக. 1**

**ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறுவது உறுதி. அதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற செய்தியை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தால் ஐக்கிய மக்கள் சக்தி சின்னாபின்னமாகும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த வருடம் நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. நாட்டின் தற்போதைய நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அனுபவமும் திறமையுமுள்ள தலைவர் நாட்டுக்குத் தேவை. விழுந்திருந்த நாட்டைத் தூக்கி நிறுத்திய ரணில், இன்று மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற செய்தியை உத்தியோகபூர்வமாக அறிவிப்புச் செய்த பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் எவரும் இருக்கமாட்டார்கள். அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ரணிலின் வெற்றிக்காக உழைப்பார்கள் - என்றார். (ம)

## படகுச் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 1

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போயா விடுமுறை தினமென்பதாலேயே இந்தச் சேவை இடம்பெறமாட்டாது என்று வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குரூஸ் தெரிவித்தார். இதுகுறித்து ஊர்காவற்றுறை பிரதேச செயலாளருக்கு முன்னறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-125)

## பெரமுனவின் அரசாங்கம் மீண்டும் தோற்றம்பெறும்!

### நாமல் உறுதி



கொழும்பு, ஓக. 1

ராஜபக்சக்கள் தலைமையிலான அரசாங்கத்தை மக்களாணையுடன் மீண்டும் தோற்றுவிப்போம். ராஜபக்சக்களை அரசியலில் இருந்து புறக்கணிக்க ஒருதரப்பினர் இன்றும் முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


உலகில் எந்த நாடும் சேதனப் பசளைத்திட்டத்தை விவசாயத்துறையில் முழுமையாக அமுல்படுத்தவில்லை. எமது அரசாங்கம் சேதனப் பசளைத்திட்டம் தொடர்பில் எடுத்த தவறான தீர்மானம் விவசாயத்துறையில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது. போராட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் பதவி விலகினோம். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு ஏதும் நிறைவேற்றப்படவில்லை. இதுவே யதார்த்தம். மக்களாணையுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் - என்றார். (ம)

**நாளை** 02.08.2023 புதன்கிழமை ஆடி 17

சுபநேரம் : 04.33 - 06.03

ராகுகாலம் : 12.03 - 01.33

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விக்கியை எம்.பி. ஆக்கியமைக்காக தமிழ் மக்கள் கவலைப்படும் நிலை!

## அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 1**

**ஜனாதிபதி ரணிலுடன் டீல் வைத்துக்கொண்டு, முதலில் கதைத்து வைத்த விடயத்தை மறுநாள் வெளிப்படுத்தும் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளை பார்க்கும்போது, விக்னேஸ்வரனை நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கியமைக்காக தமிழ் மக்கள் கவலைப்பட வேண்டிய நிலையேற்பட்டுள்ளது என்று அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான ஜோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்குச் சென்று திரும்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் சர்வகட்சிக் கூட்டத்தை நடத்தியுள்ளார். 13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை தங்களால் வழங்க முடியாது எனவும், அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசித் தீர்க்க வேண்டும் என்றும் கருத்துகள் கூறியிருக்கின்றார். 13 ஆவது திருத்தம் என்பது தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தீர்க்கப் போதுமானதொன்றல்ல. அதனை தமிழ்த் தரப்புகள் பல சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டியிருக்கின்றன.

இவ்வாறான நிலையில், அரசியலுக்கு புதியவராக வந்துள்ள விக்னேஸ்வரனுடைய நகைச்சுவை தாங்க முடியாததாக உள்ளது. ஆயுதங்கள் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை பொலிஸ் அதிகாரத்தை தாருங்கள் எனக் கேட்பது ஏற்றுக் கொள்ள முடியாது. பொலிஸ் அதிகாரம் இருப்பதே சட்டத்தை அமுல்படுத்துவதற்காகத்தான்.

மாகாணசபை உருவாக்கும் சட்டங்களை நடைமுறையில் செயற்படுத்துவதற்குத்தான் பொலிஸ் அதிகாரங்கள் தேவை. ஆகவே ஆயுதங்கள் இல்லாது பொலிஸ் அதிகாரத்தைப் பேண முடியாது. இந்த விடயங்கள் விக்னேஸ்வரனுக்குத் தெரியாமலில்லை.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நோக்கம் அவரிடம் இல்லை. தமிழ் அரசியலை 13 க்குள்ளேயே வைத்திருப்பதுதான் அவரது நோக்கம். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் தமிழர்களது கவனம் சென்றுவிடாமல் 13க்குள்ளாகவே சுழன்று கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமாக உள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ்க் கட்சிகள் அந்தத் திட்டத்துக்குள் சிக்கியிருப்பது கவலைப்பட வேண்டிய விடயமாகும். 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள விடயம். அதனை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமை. அதனைச் செய்யுங்கள் என ஒன்றுபட்ட குரலாக தமிழ்த் தரப்பு உறுதியாகக் கூற வேண்டும் - என்றார். (ம-100)

## சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட சிறுவனின்

## சிறுநீரகம் அகற்றப்பட்ட விவகாரம் விசாரணை நடத்துவதற்கு உத்தரவு!

*கொழும்பு, ஓக. 1*

முஹம்மது ஹம்தி எனும் சிறுவனுக்கு ஏற்பட்ட நிலை தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக கொழும்பு, லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

செயலிழந்த சிறுநீரகத்துடன் பிறப்பிலேயே மற்றைய சிறுநீரகம் ஒட்டியிருந்ததாலேயே மற்றைய சிறுநீரகமும் செயலிழந்திருக்கும் என நான் எண்ணுகிறேன். அதன் காரணமாகவே செயலிழந்த சிறுநீரகத்தை அகற்றும்போது மற்றைய சிறுநீரகமும் நீக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சிறுவனின் பெற்றோரிடமிருந்து எனக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை.

சத்திர சிகிச்சை மேற்கொண்டு 7 மாதங்கள் கடந்துள்ளன. இந்த சத்திர சிகிச்சை மேற்கொண்ட விசேட சத்திர சிகிச்சை நிபுணர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இருப்பினும், அதன் பின்னர் சிகிச்சைகளை மேற்கொண்ட மருத்துவர்களிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நான் பிரதிப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார்.

இதேவேளை, பக்கச்சார்பற்ற விசாரணைகள் மூலம் சிறுவன் தொடர்பில் இடம்பெற்ற அனைத்து விடயங்களும் வெளிக்கொணரப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சம்மில் விஜேசிங்க வலியுறுத்தியுள்ளார்.

முஹம்மது ஹம்தி என்ற சிறுவன் ஒரு வயது முதல் சிறுநீர் கழிப்பதில் ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிறுவனின் சிறுநீரகங்களில் ஒன்று பழுதடைந்துள்ளதால் அதை அகற்றுவது சிறந்தது என்று மருத்துவர்கள் ஆலோசனை தெரிவித்தனர். 2022 டிசம்பர் 24ஆம் திகதி கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிறுவனின் உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்ததை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் சிறுவனின் இரு சிறுநீரகங்களும் அகற்றப்பட்டமை தெரியவந்துள்ளது. சிறுவன் கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## வடமாகாணத்தில் சீரான வானிலை!

கொழும்பு, ஓக. 1

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும். மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுகளிலும், வடக்கு மற்றும் வடமத்திய, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். காற்று தென்மேற்கு திசையில் மணிக்கு (30-40) கி.மீ. வேகத்தில் வீசும். காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும், சிலாபத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு (55-65) கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என்றுள்ளது. (ம)

## பரீட்சை முடிவுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சைவப்புலவர் பரீட்சையில் மூத்ததம்பி சிவகுமாரன் (கொக்கட்டிச்சோலை), கந்தசாமி கைலைநாதன் (மானிப்பாய்), குணசிங்கம் கந்தபாலன் (கோப்பாய் ), திருமதி சிவப்பிரியா ராஜ்குமார் (இணுவில்), பராபரம் துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா சுவாமிநாதசர்மா (இணுவில்) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளம்சைவப்புலவர் பரீட்சையில் மகேந்திரன் வினோக்சன் (பொலநறுவை), அருமைநாதன் சதீஸ்குமார் (திருகோணமலை), கனகேந்திரன் யோகமணி (திரனியகல), நடராஜா தர்சிகா (பொலநறுவை), சுதாகரன் ஸர்காந் (களுவாஞ்சிக்குடி), அழகேந்திரன் நிலாந்தினி (மூதூர்), பானுப்பிரியா தில்லைமணி (வட்டுக்கோட்டை) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (ய-66)



## மாணவர்களுக்கு ஓவியப்போட்டி

கொடிகாமம், ஓக. 1

சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை ஏற்பாட்டில் வலிமேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப்போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி, சிறுபொறி என்ற காலாண்டுச் சஞ்சிகை வெளியிடப்படவுள்ள நிலையில், மாணவர்களின் ஓவியங்களும் அதில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கிலேயே குறித்த ஓவியப்போட்டி இடம்பெற்றுள்ளது. (ம-ரி3-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
05 . 04 . 1952



உதிர்வு
29 . 07 . 2023

## திருமதி சிவானந்தராஜா இந்திராணி

புத்தூர் கிழக்கு வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு அண்ணமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தராஜா இந்திராணி 29.07.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் சிவானந்தராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், ஞானசேகரம்(கோப்பாய்), அமரர் கணேசநாதன்(கனடா), வசந்தி(கோப்பாய்), வசந்தன்(சுவிஸ்), ஜெயந்தி(டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், சரஸ்வதிதேவி (கோப்பாய்), விஜயபாக்கியலக்ஷ்மி (கனடா), தவசேகரசிங்கம்(கோப்பாய்), அனுந்தினி(சுவிஸ்), பாலகணேசன்(டென்மார்க்), ஆகியோரின் மைத்துனியும், ராஜினி(சுவிஸ்), ராதாகரன்(கோப்பாய்), நிரோஜினி (கோப்பாய்), சிவராகுலன்(சுவிஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், அருணகிரிநாதன் (சுவிஸ்), தாரணி(கோப்பாய்), விஜயரூபன்(கோப்பாய்), கிருஷாந்தி(சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌதமன், நிர்த்திகா(சுவிஸ்), அஸ்மிதா(கோப்பாய்), நிவிகன் (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்துமாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

0779701071மகன்(கரன்)
0765871687 மருமகன்(ரூபன்)
0041796939132மருமகன்(அருண்)
004179 771 93 57மகன்(ரகு,ராகுலன்)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 04 . 1936



இறப்பு
30 . 07 . 2023

## திருமதி தியாகராஜா திருவாலாம்பிகை

பாண்டின்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா திருவாலாம்பிகை நேற்றுமுன்தினம் (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம், ஆனந்தசிவம் மற்றும் அருளானந்தம் (கனடா), நிக்குணரட்ணம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், ராஜ்குமார் (ஜீவா), தேவகி, ரவீந்திரகுமார் (ரவி - லண்டன்), சத்தியகுமார் (ரூபன்), நந்தினி (லண்டன்), தியாககுமார் (லண்டன்), தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோராணி, ராதா (லண்டன்), கலாரஞ்சினி, ரகுநாதன் (லண்டன்), சகிலா (லண்டன்), காந்தரூபன் ஆகியோரின் மாமியாரும், யோகராஜ் (டென்மார்க்), அஞ்சனா, சிந்துஜா (லண்டன்), ராஜினி (லண்டன்), அபிலக்ஷா (லண்டன்), சுரந்தகி, கவிநயா (லண்டன்), வைஷ்ணவி (லண்டன்), சங்கவி (லண்டன்), பிரவீனன், அஸ்வினன் ஆகியோரின் பேர்த்தியும், செல்வரட்ணம், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2023) புதன்கிழமை இலக்கம் 54, பாண்டியன்தாழ்வில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 833 0844

54, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

(CS/51484)AH-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கோபாலபிள்ளை கதிர்காமநாதன் (K.K. நாதன்)

(ஓய்வுபெற்ற தபாலக உத்தியோகத்தர், பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்.)



அன்புக்கு உருவம் நீங்கள்
எங்களை விட்டு நீங்கள்
எங்கு தான் சென்றீர்களோ?
ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
உங்கள் அன்பு முகம் பாராமல்
நாங்கள் கலங்கித் தவிக்கின்றோம்
ஆலவிருட்சம் போல் கிளைகளைப் பரப்பி
எங்களை எல்லாம் தாங்கி நின்றவரே!
இன்று நீங்கள் இல்லாமல்
தனியாய் தவிக்கின்றோம்
நாம் வாழும் காலம் வரை
உங்கள் நினைவுகளும் எங்கள்
உள்ளத்தில் வற்றாத ஊற்றாகப் பொங்கிப் பெருகும்
உங்கள் வாழ்வின் சிறப்புகளை
எங்கள் மனதில் நிலை நிறுத்தி
உங்கள் ஆத்ம சாந்திக்காய் உளமுருகி
நயினை நாகபூசணி தாயை வேண்டுகிறோம்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



குடும்பத்தினர்.

15/2, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பிறப்பு- 07.04.1952 இறப்பு 12.08.2022

(CS 25748)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் கறுவாக் கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 1

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாண வர்களுக்கு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழ கத்தினரால் கறுவாக் கன்றுகள் நேற்றுத் திங்கட்கி ழமை வழங்கப்பட்டன.

சுற்றுச்சூழலைப் பேணிப்பாதுகாக்கும் அதே வேளை, வருமானத்தை ஈட்டும் விதமாகவும் ஒரு மாணவருக்கு ஆறு கன்றுகள் வீதம் 50 மாணவர்களுக்கு இந்தக் கன்றுகள் வழங்கப் பட்டன.

இதன்பொழுது கழக உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பல ரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ம-ரி2-125)


## தேவை

கணினி MS Office தெரிந்தவர்களும் சாரதியும் தேவை.

**077 772 2215**

## முகாமையாளர் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள அண்ணாமலையான் ஸ்ரீராகவேந்திரர் திருமண மண்டபத்துக்கு **கணக்கு எழுதத் தெரிந்தவரும் மற்றும் முகாமைத்துவத்தில் (Manager Cum Accountant ) அனுபவமுடைய முகாமையாளர் தேவை.** (28 - 40 வயதுக்கு உட்பட்ட ஆண்கள்) கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிருப்பங்களுடன் விண்ணப்பிக்கவும்.

(C51485)AH-1)

விளம்பர இலக்கம்:- JF /1048

உதயன் பப்ளிக்கேசன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# கிரிக்கெட் வீராங்கனைக்கு சரவணபவனால் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பெற் றுள்ள சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் மாணவி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனால் கௌரவிக்கப்பட்டார்.

சுழிபுரம் பாண்டவெட்டை காட்டுப்புலம் 'இணைந்த கரங்கள்' அமைப்பின் ஏற்பாட்டில், மாணவர் கௌர விப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே கிரிக்கெட் அணிக்குத் தெரிவுசெய்யப் பட்ட சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவி செல்வராசா கிருஸ்ரிகா பிரதம விருந்தினரான ஈ.சர வணபவனால் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், பாண்டவெட்டை காட்டுப்புலம் கிராமத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்ற மாணவர் கள்மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர், கிராமஅலுவலர்கள், அலைபாடும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆலோசகர், நாங்கள் செயற்பாட்டு அமைப்பின் தலைவர், மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-ரி3-125)

# கஞ்சா விற்ற இளைஞர் கைது!

மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்களுக் குக் கேரளக் கஞ்சா விற்பனை செய்த 26 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட் டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகள் முடிந்து செல்லும் வழியில் சந்தேகநபர் சில காலமாகக் கேரளக் கஞ்சாவை விற்பனை செய்து வந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணை களில் தெரியவந்துள் ளது. அத்துடன் சந்தேகநபரிடமிருந்து கேரளக் கஞ்சா பொட்டலங்களும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன. (ம-22)


## 31[ம்] நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



**கந்தசாமி இளங்கோவன்**

**(ஓய்வுபெற்ற தீவுப்பகுதி பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், முன்னாள் யாழ். மத்தியஸ்தர் சபை மத்தியஸ்தர். தலைவர் சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை, அகில இலங்கை சமாதான நீதவான்)**

கடந்த (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.08.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலும் மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் **05.08. 2023 சனிக்கிழமை** மதியம் 12.00 மணியளவில் இல.412. பலாலி வீதி. கோண்டாவிலில் அமைந்துள்ள **இராசமணி மண்டபத்தில்** இடம்பெறும். மேற்படி நிகழ்வில் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**639/1, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS 25747) A-1


# டொலர் ஏற்றம்!

கொழும்பு, ஓக. 1

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ந்தும் ஏறுமுகம் கண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் நேற்று திங்கட்கிழமை வெளியிடப்பட்ட நாணய மாற்றுப் பெறுமதிகளின் அடிப்படையில், ஒரு டொலருக்கு நிகரான ரூபாவின் கொள்வனவுப் பெறுமதி 322.96 ரூபா வாகவும், விற்பனைப் பெறுமதி 335.40 ரூபாவாகவும் பதிவாகி யுள்ளது. (ம)



# இளங்கோபுரத்தில் மாதிரிப் பண்ணை

முல்லைத்தீவு, ஓக. 1

முல்லைத்தீவு - விசுவமடு இளங்கோபுரத்தில் மாதிரிப் பண்ணையொன்று தனி யொருவரின் நிதிப்பங்களிப்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக் கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இந்தப் பண்ணை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பங்கேற்று மாதிரிப் பண்ணையைத் திறந்து வைத்தார்.

தற்போது 30க்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பண்ணையில் பணிபுரிந்து வருகின்ற னர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-113)


## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 02 . 1961

மறைவு 30 . 07 . 2023

**மயில்வாகனம் குணறெபிசனா**

கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குணறெபிசனா 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் குணமணியின் பாசமிகு மகளும், வெற்றிவேல் (லண்டன்) வைமன் (ஜேர்மனி), குணசுலோசனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகநாயகி, தங்கேஸ்வரி, ஆறுமுகசாமி ஆகியோரின் மைத்துனியும், கனித்தா, குயின்மேரி ஆகியோரின் அத்தையும், கிரிசங்கர், திவ்வியா, யுகந்தன், ஜிந்துஜன் ஆகியோரின் சித்தியும், அரியநாயகம், சோதிமலர், நடராசா, பூமலர் ஆகியோரின் மருமகளும், அபர்ணா, துகாஷ், துவன், துயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே:077 1916 624**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 25750)A-1


# பாவனையில் இருந்து 65 மருந்துகள் நீக்கம்!

கொழும்பு, ஓக.1

இந்த ஆண்டின் கடந்த 7 மாதங்களில் தரம் தொடர்பான பிரச்சினை காரணமாக 65 மருந்துகள் பாவனையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

65 மருந்துகளின் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து களும் உள்ளன என்றும், 6 மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல்வயலில் வீடுடைத்து பணமும் நகையும் நேற்று 'அபேஸ்'

கொடிகாமம், ஓக. 1
வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் 3 லட்சம் ரூபா பணமும் மூன்றரை பவுண் நகையும் திருடப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கல்வயல் பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கணவன் மேசன் வேலைக்குச் சென்றுள்ள நிலையில் மனைவி அருகிலுள்ள காணிக்கு ஆட்டைக் கட்டிவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் பின்கதவின்பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்துவிட்டு, உள்ளேசென்று பார்த்தபோது 3 லட்சம் ரூபா பணமும், மூன்றரைப் பவுண் நகையும் திருடப்பட்டமை தெரியவந்தது. (அ-ஒ-159)

## கோழி இறைச்சியும் இனி இறக்குமதி

கொழும்பு, ஓக. 1
கோழி இறைச்சியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க ஜனாதிபதி தீர்மானம் மேற்கொண்டுள்ளார் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
கடந்த 27ஆம் திகதி ஜனாதிபதியால் நடத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான விசேட கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

## கொள்ளையடிப்பதை அரசாங்கமே நிறுத்து

*கொழும்பில் ஜே.வி.பி. போராட்டம்*

கொடிகாமம், ஓக. 1
கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக தேசிய மக்கள் சக்தியினரால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஈ.பி.எப்., ஈ.ரி.எப். உள்ளிட்ட உழைக்கும் மக்களின் நிதியைக் கொள்ளையடிப்பதை உடனடியாக நிறுத்துமாறு கோரி அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டம் இடம்பெறும் பகுதியில் பொலிஸாரின் பிரசன்னம் அதிகமாக இருந்தது.
இதேவேளை, கொழும்பில் பல முக்கியமான இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## அதிகாரப் பகிர்வு, தேர்தல்

# அன்றிலிருந்து எமது நிலைப்பாடு ஒன்றே

**சுமந்திரன் அறிக்கை**

**யாழ்ப்பாணம், ஓக. 1**
**மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதனை ஜனாதிபதியின் முதலாவது சர்வ கட்சிக் கூட்டத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருவதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் கடிதத் தலைப்பில் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த வாரம் இடம்பெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில், அதிகாரப் பகிர்வா? மாகாணசபைத் தேர்தலா என்பதை தமிழ் தரப்புக்கள் முடிவு செய்துவரவேண்டும் எனவும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொன்றைக் கோரி குழப்புகின்றன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே இது தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கையின் அரசமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். அரசமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாதது விடுவது என்பது அரசமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். அரசமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பது. மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் இருந்து 2016 - 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவை வரை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பதவிக் காலத்தின் போது இந்தியாவுடன் குறைந்தபட்சம் மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் ,மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு முன்பு இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்ததோடு இதை செயற்படுத்த தகுந்த சட்டம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரைகளுக்கு இணங்க நான் ஒரு தனி நபர் சட்டவரைவை தயாரித்து முன்வைத்திருந்தேன், அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் சட்டவரைவு உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
2022ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாணசபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், 2023ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் மீண்டும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தினோம். கடந்த ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே தெரிவித்தோம். இவ்விடயத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.
அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை, என்றுள்ளது. (அ-ஒ,5)

## பியர் உற்பத்திக்கு அரிசி: விவசாய அமைச்சு தடை

கொழும்பு, ஓக. 1
விலங்கு தீவனம் மற்றும் பியர் தயாரிப்புகளுக்கு அரிசியைப் பயன்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, அந்த அமைச்சின் செயலர் குணதாச சமரசிங்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
விலங்கு தீவனத்துக்கும் பியர் தயாரிப்புக்களுக்கும் அரிசிப் பாவனை இடைநிறுத்தப்படுவதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் என விவசாய அமைச்சர் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக இரவிரவாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1
தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும், தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் நேற்று மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த மே 3 ஆம் திகதி தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் பல கட்டங்களாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.
போராட்டமானது இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்துக்கு அண்மையில் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன்,
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். போராட்டம் இடம்பெறும் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-27)



## சிறைகளுக்குள் மடிந்த அரசியல் கைதிகளின் நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், ஓக. 1
சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சாவைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந் தல் நிகழ்வு குரலற்ற வர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் குருநகர் புதுமை மாதா தேவாலயத்துக்கு அருகாமையில் உள்ள குரலற்றவர்களின் குரல் பணியிடத்தில் அந்த



அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. (அ-ஒ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடு ஆலயத் திருவிழா

# சகல வியாபாரிகளுக்கும் மருத்துவச் சோதனைகள்

மன்னார், ஓக. 1

**மடு ஆலய விழாவுக்காகக் கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சகலரும் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். அவர்கள் விற்பனை செய்யும் உணவுப் பொருள்களின் தரமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்று மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.**

மடுப் பெருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 15ஆம் திகதி வழமை போன்று நடைபெற இருக்கும் மருத மடு அன்னையின் வருடாந்த பெரு விழாவுக்கான சுகாதார நடைமுறைகள் கடந்த காலங்களைப்போல் இந்த முறையும் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். மருதமடு ஆலய வளாகத்துக்குள் இருக்கும் மருத்துவ மனையில் எமது சுகாதாரப் பிரிவினர் அங்கு நிலைகொண்டு அவசர மற்றும் சாதாரண சிகிச்சைகள் அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மடு ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் டெங்குத் தொற்றைப் பரப்பக் கூடிய நுளம்புகள் உள்ளனவா? என்பது தொடர்பான பரிசோதனை எமது பூச்சியல் பிரிவினரால் மேற்கொள்ளப்படும். டெங்கு நுளம்பு இனம் காணப்பட்டால் புகையூட்டல் இடம்பெறும்.

கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சகலரும் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். திருவிழாவுக்கு வரும் மக்களின் தொகைக்கு ஏற்ப போதியளவு சுகாதார அணியினரை சேவையில் ஈடுபடுத்தவும் நாம் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (எ-60)



ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தீட்சா குருவாக சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.குமாரசுவாமி தலைமையில் சைவ சமய தீட்சை அண்மையில் வழங்கப்பட்டது. (ய)

## 'நமோ நமோ மஹதா' உமாராவுக்குச் சிக்கல்!

கொழும்பு, ஓக. 1

லங்கா பிரீமியர் லீகின் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான தொடக்க நிகழ்வில் தேசிய கீதத்தை தவறாகப் பாடியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிரபல பாடகர் உமாரா சிங்கவன்சவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

'தேசிய கீதம் ஒரு நாட்டின் அடையாளத்தையும் கலாசாரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றாகும். அதனை எவராலும் திரிபுபடுத்த முடியாது. பாடலை மீண்டும் உருவாக்கவோ அல்லது ஏனைய இசையுடன் கலக்கவோ முடியாது. இவ்விடயம் தொடர்பில் இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு அறிவிக்கவும் எதிர்பார்க்கின்றோம். தேசிய கீதத்தை பாடுவதற்கு ஒரு நிலையான வழி உள்ளது' என்று தெரிவித்தார்.

பிரபல பாடகி உமாரா சிங்கவன்ச தேசிய கீதத்தில் 'நமோ நமோ மாதா'வுக்குப் பதிலாக 'நமோ நமோ மஹதா' என பாடியுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (அ-ஒ-இ)

## நூற்றாண்டு வாராந்த ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு வாராந்தச் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கடந்த நூறாண்டுகளில் சாதித்த விடயங்கள் எவை? எனும் பொருளில் பேருரை ஆற்றினார். (ய-66)



சட்டத்துக்கும், மனித உரிமைக்குமான நிறுவனத்தில் மனித உரிமைகள் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நிறுவனத்தின் இயக்குநர் அம்பிகா ஸ்ரீதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளா தேவி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-ரி-27)



## சான்றிதழ் வழங்கல்



முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை மாமூலை பகுதியில் அமைந்துள்ள வித்தியாதீபம் கல்வி மற்றும் தற்சார்பு பொருளாதார மேம்பாட்டு அமைப்பின் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியினை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் பொருள் கண்காட்சியும் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை இணைப்பாளர் லிகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட பதில் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலாளர் சி.குணபாலன், ஒட்டு சுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி கை.சுதர்சன், கரைதுறைப்பற்று பிரதேசசெயலக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது புதன்வயல் கிராமத்தில் அமைந்துள்ள தண்ணிமுறிப்பு அ.த.க. பாடசாலையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பாடசாலையின் நிர்வாக தேவைக்காக மடிக்கணினி மற்றும் அலுவலகப் பொருள்கள் புலம்பெயர் மக்களின் நிதிப்பங்களிப்பில் வழங்கிவைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து தையல் பயிற்சியினை நிறைவுசெய்த மாணவர்களினால் தைக்கப்பட்ட ஆடைகள் விற்பனை நிலையமும் பிரமுகர்களினால் திறந்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்....

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியால் மாத்திரம் அரசியல் தீர்வை வழங்கமுடியாது. அவரால் யோசனைகளை மாத்திரம் முன்வைக்க முடியும். சர்வ கட்சிகளைக் கொண்ட நாடாளுமன்றம் தான் அரசியல் தீர்வு தொடர்பில் இறுதி முடிவு எடுக்க முடியும். இது பழுத்த அரசியல் வாதி சம்பந்தனுக்குத் தெரியும். அவர் கூறும் வெளியக சுயநிர்ணய உரிமை என்னவென்று எனக்குப் புரியவில்லை. இறுதியாக நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் சம்பந்தன் தீர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார். அது தொடர்பில் நான் கவனம் செலுத்துவேன். அதிகாரப் பகிர்வு தொடர்பில் கட்சிகளுடனான பேச்சுத் தொடரும். அது தொடர்பில் நாடாளுமன்றம் முடிவுகளை எடுக்கும்-என்றார். (அ-ஒ,5,22)

## தொடர்....

குடும்பப் பெண் நேற்று உயிரிழந்துள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தாயாவார்.
காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அவர் தனியார் மருத்துவமனையில் மருந்து எடுத்துள்ளார். காய்ச்சல் தொடர்ந்துள்ளமையால் கடந்த 29 ஆம் திகதி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்று அதிகாலை மாற்றப்பட்டுள்ளார். அங்கு சேர்க்கப்பட்ட சில மணி நேரத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் நேற்றுமேற்கொண்டார். (அ-ஒ-26,100)

## ஒருவாரத்தின்...

வாரத்தின் பின்னர் 5பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீடு புகுந்த குழுவொன்று வீட்டு உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், பெற்றோலை ஊற்றி வீட்டுக்கு தீயிட்டது. இந்தச்சம்பவத்தில் மூச்சுதிணறல் காரணமாக 21வயது இளம் குடும்ப பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், 10 பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் ஏற்பட்ட காயங்களுக்கு உள்ளான கணவனும் பின்னர் உயிரிழந்திருந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பிலிருந்து வருகை தந்த பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. பலரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன. இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 5பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். (அ-ஒ-110)

## இந்தியாவுக்கு...

திய புலனாய்வு பிரிவால் நேற்று திங்கட்கிழமை காலை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.
இலங்கையிலிருந்து தனுஷ்கோடி வழியாக மேற்கொள்ளப்பட்ட தங்க கடத்தலே முறியடிக்கப்பட்டுள்ளது. தங்க கடத்தல் தொடர்பில் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியில் முற்றுகையிட்டிருந்த இந்திய மத்திய புலனாய்வு பிரிவால் தங்கத்துடன் கடத்தலில் ஈடுபட்டோர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.
இதன் பெறுமதி இந்திய மதிப்பில் 5.3 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடத்தலில் ஈடுபட்ட தங்கச்சிமடம் மற்றும் மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-100)

## சிறுமி...

குற்றச்சாட்டில் 23 வயதான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன்னர் சிறுமியை பலவந்தமாக கடத்திச் சென்று காட்டுப்பகுதியில் வைத்து சந்தேகநபர் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், சந்தேகநபரைத் தேடி வந்தனர். இந்த நிலையில் அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இன்றைய தினம் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்படவுள்ளார். (அ-ஒ-10)

## தாலிக்கொடி...

கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளார்.
தேர்த்திருவிழாவின்போது தண்ணீர்ப்பந்தலில் பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது பெண்ணின் தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.
இதனையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் 4 பேரிடமிருந்தும் களவாடப்பட்ட தாலிக்கொடி மீட்கப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-125)

## வடக்கு....

எதுவுமில்லை. பழைய சேவைகளை நிறுத்தி புதிய சேவைகளை ஆரம்பித்துள்ளோம் - இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார்.
ரயில் பாதை புனரமைப்புக்கு முன்னர் கல்கிசையிலிருந்து தினமும் காலை 5.15 புறப்படும் கடுகதி ரயில் (4021) தற்போது சனிக்கிழமைகளில் மாத்திரம் அதே நேரத்தில் சேவையில் ஈடுபடுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து 13.40 க்குப் புறப்படும் கடுகதி ரயில் (4022) தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. முன்னர் இயக்கப்பட்ட சிறிதேவி ரயில் சேவையில் ஈடுபடவில்லை. வார நாட்களில் சேவையில் ஈடுபட்ட கடுகதி ரயில் (4003,4004) இப்போது சேவையில் ஈடுபடவில்லை. வார இறுதி நாள்களில் இரவு 10 மணிக்கு இடம்பெற்ற ரயில்சேவையும் (4091,4092) தற்போது இடம்பெறுவதில்லை. இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டுள் ளமையால் வடக்கைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல விடம் கேட்டபோது,
பலமாதங்களுக்குப்பின்னர் கொழும்பிலிருந்து வடக்குக்கான ரயில் சேவை மீண்டும் ஆரம்பித்துள்ளது. கல்கிசை மற்றும் கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான ரயில் சேவைகள் நாள்தோறும் சீரான முறையில் இயங்கவேண்டும். அதற்காக பழைய சேவைகளில் சில மட்டுப்படுத்தப்பட்டும் மக்களின் நன்மை கருதி சில புதிய சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பழைய சேவைகள் சீராக இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைக்காமல் ரயில் சேவைகள் முழுமையாக இயங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இனிவரும் காலங்களில் பழைய சேவைகளையும் முழுமைப்படுத்தி புதிய சேவைகளையும் முழுமைப்படுத்தி வடக்கு ரயில் மார்க்கத்தில் புதிய அத்தியாயம் தொடங்கும். பழைய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டமைக்கு எந்தவித அரசியலும் இல்லை என்று பந்துல பதிலளித்துள்ளார். (அ-ஒ.5-22)

## வவுனியா...

டுள்ளது.
வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலருக்கு சின்னம்மை நோய் ஏற்பட்டுள்ளமை அண்மையில் கண்டறியப்பட்டது.
இதனையடுத்து சிறைச்சாலை வளாகம் 14 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், கைதிகளை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கான செயற்பாடும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் அனைத்துக் கைதிகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
விளக்கமறியலில் உள்ள கைதிகளின் நீதிமன்றத் தவணைகளுக்கு புதிய திகதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சில வழக்குகள் நிகழ்நிலை தொழில்நுட்ப உதவியுடன் இடம்பெற்றுவருகின்றன. (அ-ஒ-110)

## இந்திய...

ணத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைவாக, இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பலதுறை பிரதிநிதிகள், மரபுசார் போன்ற துறைகளில் நிபுணர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை உள்ளடக்கிய குழுவே வருகை தந்துள்ளது.
புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளபாடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியனவற்றில் முதலீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகளை இந்தக் குழு ஆராய்ந்துள்ளது. இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதேவேளையில் பகிரப்பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குறிப்பிட்டார்.
கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகாரசபை, முதலீட்டுச்சபை, கூட்டுறவு, பாற் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். வடமாகாணத்துக்கான தமது 3 நாள் பயணத்தின் போது சம்பந்தப்பட்ட முதலீட்டுத் தளங்களையும் பார்வையிடும் அதேவேளை, வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களைச் சந்திப்பதற்கும் தூதுக்குழுதிட்டமிட்டுள்ளது. (அ-ஒ-27)

## கட்டுநாயக்கவில்...

இவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் 4 இளைஞர்கள் ஜேர்மனிக்கு செல்ல முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## சிங்களவருக்கு...

சபை சிங்கள மக்களுக்கு வழங்கியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று மாலை 4 மணிக்கு ஒன்று கூடிய மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
மகாவலி அபிவிருத்தித் அதிகார சபையே நிலங்களை அபகரிக்காதே, எமது நிலம் எமக்கு வேண்டும், தமிழர் நிலங்களிலிருந்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையே வெளியேறு எனப் பல்வேறு கோஷங்களை அவர்கள் எழுப்பினர். (அ-ஒ.27,125)

## பெற்றோல்...

றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோல் விலையை அதிகரித்துள்ளது.
ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றில் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 348 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது. கடந்த தடவை எரிபொருள் விலை மீளாய்வின்போது 10 ரூபா விலை அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் 20 ரூபா அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.
ஒக்ரேன் 95 லீற்றர் பெற்றோல் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 375 ரூபாவாகும்.
ஒரு லீற்றர் டீசலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 306 ரூபாவாகும். சுப்பர் டீசல் லீற்றருக்கு 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 358 ரூபாவாகும்.
இதேவேளை, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 226 ரூபாவாகும். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்நிறுத்தம் சாத்தியமில்லை

## புடின் திட்டவட்டம்

கீவ், ஓக. 1

**உக்ரைன் மீதான போர்நிறுத்தம் தற்போதைக்குச் சாத்தியமில்லை என்று ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளார்.**

உக்ரைன் - ரஷ்ய மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சவூதி சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அத்துடன், ஆபிரிக்கத் தலைவர்களும் புடினுடன் கடந்த வாரம் பேச்சில் ஈடுபட்டனர். இது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் பல்வேறுகட்டப் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றைச் செயற்படுத்துவதில் கடினமான அல்லது சாத்தியமற்ற விடயங்களும் உள்ளன. இந்த முன்முயற்சிகளில் ஒன்று போர் நிறுத்தம். ஆனால் உக்ரைன் தரப்பு பெரிய அளவிலான தாக்குதல் நடவடிக்கையை செயற்படுத்துகிறது. தாக்குதலுக்கு



உள்ளாகும்போது எங்களால் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த முடியாது. நாங்கள் அமைதிப் பேச்சை நிராகரிக்கவில்லை. ஆனால் இந்தச் செயல்முறை தொடங்குவதற்கு, இரு தரப்பிலும் உடன்பாடு இருக்க வேண்டும்' - என்றார். (ம)



# ரஷ்ய எல்லைக்குள் போர் ஊடுருவுகிறது

## *ஷெலன்ஸ்கி உரை*

கீவ், ஓக. 1

போர் தற்போது ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவியுள்ளது. இது துரதிர்ஷ்டமானது என்றாலும் தவிர்க்கப் பட முடியாதது என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரஷ்யாவின் எல்லைக்குள் போர் நுழைந்து விட்டது. ரஷ்யாவின் அடையாளச் சின்னங்கள், இராணுவத் தளங்கள் இலக்குகளாகும். இது தவிர்க்க முடியாத நிலை. உக்ரைன் வலுப்பெற்று வருகிறது. இருந்தாலும் ரஷ்யத் தீவிரவாதிகள் எமது எரிசக்திக் கட்டமைப்பை தாக்கக்கூடும். எனவே நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் - என்றார். (ம)



# உக்ரைன் போரை நிறுத்த சவூதியால் உச்சி மாநாடு!

## *செங்கடல் துறைமுகநகரில் ஏற்பாடு*

கீவ், ஓக. 1

உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் உச்சி மாநாடு ஒன்றை நடத்த சவூதி அரேபியா திட்டமிட்டுள்ளது.

உலகில் தானிய ஏற்றுமதி மையங்களாக ரஷ்யாவும் உக்ரைனும் அறியப்படுகின்றன. சுமார் 17 மாதங்களுக்கும் மேலாக அந்த இரு நாடுகளுக்கும் இடையில் போர் நடைபெறுவதால் தானிய விநியோகச் சங்கிலி அறுந்துள்ளது. இதனால் தானியங்களின் விலை சர்வதேச சந்தையில் தாறுமாறாக எகிறியுள்ளது. இந்த நிலையிலேயே உணவுச் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில், இந்த உச்சி மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது சவூதி.

இந்த மாநாடு செங்கடல் அருகே உள்ள துறைமுக நகரமான ஜெட்டாவில் நடைபெற உள்ளது. இதில் உக்ரைன், பிரேஸில், இந்தியா உட்பட சுமார் 30 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். மேலும் அமெரிக்காவின் சார்பில் ஜனாதிபதி ஜோ பைடனின் உயர்மட்ட அதிகாரி ஒருவரும் கலந்து கொள்ள உள்ளார். அதேசமயம் மாநாட்டில் ரஷ்யா பங்கேற்குமா? என்பது உறுதி செய்யப்படவில்லை. மேலும் இதற்கான திகதி உள்ளிட்ட ஏனைய விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. (ம)

# வெப்பத் தணிப்புக்காக குளிரூட்டல் மையங்கள்

## *அமெரிக்காவில் நடைமுறை*

வொஷிங்டன், ஓக. 1

அமெரிக்காவில் வெப்பநிலை கடுமையாக உயர்ந்ததையடுத்து, வெப்பத்தைத் தணிப்பதற்காகக் குளிரூட்டல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த சில நாள்களாக வெயிலின் கொடுமை பொதுமக்களை வாட்டி வதைத்து வருகிறது. தினமும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் குழந்தைகள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் வெப்ப அலையில் சிக்கி பாதிக்கப்பட்டு உள்ளனர். பலர் நோய்த் தாக்கத்தால் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே வெப்பத்தைத் தணிப்பதற்காக இந்தக் குளிரூட்டல் மையங்கள் திறக்கப்பட் டுள்ளன. (ம)






வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட வடக்கின் சிறந்த சுற்றுலாப் பகுதிகளில் ஒன்றான சாட்டி கடற்கரையில் வேலணைப் பிரதேச சபையால் நேற்றுமுன் தினம் முதல் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

**வேலையாள் தேவை**

கிளிநொச்சி, பரந்தனில் உள்ள Restaurant இற்கு

- ✓ சமையலாளர்
- ✓ சமையல் உதவியாளர்

உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**076 604 0011**

**மணமகள் தேவை**

1978, (V), கேட்டை 3ம் பாதம் 11 இல் சூரிய, செவ்வாய் 56 கிரக பாவம். அரச உத்தியோகம் இல்லை. சொந்த வருமானம் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்ப்பு இல்லை)

**075 981 4691**

**வேலையாட்கள் தேவை**

❖பூங்கன்றுகள் விற்பனை . நிலையத்திற்கு தங்கியிருந்து வேலை செய்ய ஆட்கள் தேவை.

❖தங்கியிருந்து சமையல் செய்வதற்கு பெண் சமையலாளர் தேவை.

**075 944 4601**

**காணி விற்பனைக்கு உண்டு**

அரியாலை தென்மேற்கு ஆங்கில பாடசாலைக்கு பின்புறமாக A9 றோட்டிலிருந்து 2Km , யாழ் நகரிலிருந்து 7Km , 50 பரப்பு காணி விற்பனைக்குண்டு. முதலீட்டு நோக்கத்திற்கு பண்ணை அமைக்க சிறந்த இடம்.

**077 423 5458, 077 262 7581**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org